


மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

பெருந்துறை ஊராட்சி ஒன்றியம்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், மேட்டுப்புதூர் ஊராட்சி, மேட்டுப்புதூர் கிராமம், சர்வே.எண் - 148/1A1, 148/1B-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1:400

இணையவழி விண்ணப்ப எண் : BYOMVEZJ, நாள்.27.09.2022.

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 2.36 ¾ ஏக்கர் (அ) 9583.00 சதுர மீட்டர்

ஒதுக்கிய மனைகள் : 43

மனைப்பிரிவின் எல்லை ..............................

நிலையிலுள்ள சாலை ..............................

பொது ஒதுக்கீடுகள்:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

மனைப்பிரிவின் சாலையின் பரப்பு : 3701.69 ச.மீ ................

பூங்கா : (மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x10%
: (9583.00 - 3701.69 = 5881.31) x 10% = 588.13 ச.மீ (10.00%)

மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானத்திற்கு தேவையான பரப்பு } (மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x10%
: (9583.00 - 3701.69) x 0.5% = 29.40 ச.மீ

பொது உபயோகம் (A) : 37.21 ச.மீ (0.63%) ..................................

சாலைகள், பொது உபயோகம் பரப்பு தான ஆவணம் எண்: 2338/2022, நாள்: 27/10/2022 - ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கடிகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

பொது உபயோகம் (B) : 48.19 ச.மீ (0.82%) ..................................

TANGEDCO பரப்பு தான ஆவணம் எண் : 2337/2022, நாள்: 27/10/2022 - ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது

கட்டிட வரம்பு :-

9.0மீ வரை அகலம் கொண்ட சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்
9.0மீக்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்குகள் :-

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்
12.0மீ க்கு மேல் 30.5மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.50மீx4.50மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள் :-

1. அரசாணை எண்-18 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள் 04.02.2019 -ன் படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் (ம) அரசாணை எண்-16 ந.நி மற்றும் கு.நீ.வ நாள் 31.01.2020 -ன் படி TANGEDCO ஒதுக்கீட்டினை TANGEDCO (அ) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண்-181 வீ.வ (ம) ந.வ.து நாள் : 09.12.2020 -ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெரு விளக்கு ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், வட்டார வளர்ச்சி அலுவலர், மேட்டுப்புதூர் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு ஊராட்சி பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த மின் அழுத்த பாதையினை சாலையின் போக்கிற்கு ஏற்றவாரு மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றிமைக்கப்பட வேண்டும்.

SWP / DTCP / ERODE / LAYOUT APPROVAL NO. 60/ 2022

நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Erode
Date:2022.11.10 10:17:19